Australian Government

COVID-19 VACCINATION

# உங்களுடைய ‘கோவிட்-19 ஆஸ்ட்ரா ஸெனெகா’ தடுப்பூசி மருந்தினை நீங்கள் இட்டுக்கொண்ட பிறகு

கடைசியாகப் புதுப்பிக்கப்பட்டது: 30 ஜூலை 2021

## இந்தத் தடுப்பூசி மருந்தினைப் பற்றி

**இன்று நீங்கள்** ‘ஆஸ்ட்ரா-ஸெனெகா’ எனும் ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்தினை **இட்டுக்கொண்டுள்ளீர்கள்.**

‘கோவிட்-19’ காரணமாக மக்கள் நோய்வாய்ப்படுவதை இந்தத் தடுப்பூசி மருந்தினால் தடுக்க இயலும். ‘ஆஸ்ட்ரா-ஸெனெகா கோவிட்-19’ தடுப்பூசி மருந்தில் உயிரோடுள்ள ‘ஸார்ஸ்-கோவ்-2’ (SARS-CoV-2) வைரஸ் எதுவும் இல்லை (‘கோவிட்-19’ நோயைத் தோற்றுவிக்கும் வைரஸ் ஆகும் இது), மற்றும் இதனால் உங்களுக்குக் ‘கோவிட்-19’-ஐ ஏற்படுத்த இயலாது. ‘ஸார்ஸ்-கோவ்-2’ வைரஸ்-இன் முக்கியமானதொரு பகுதியான ‘ஸ்பைக் புரதம்’ (spike protein) என்பதன் மரபுக் குறியீட்டினை இது கொண்டுள்ளது, மற்றும் இந்த ‘ஸ்பைக் புரத’மானது தீங்கு விளைவிக்காத சாதாரண சளியை ஏற்படுத்தும் ‘கடத்தி’ வைரஸ் (‘அடினோவைரஸ்’) ஒன்றினால் உங்களுடைய ‘செல்’களுக்குள் (‘கலன்’களுக்குள்) கடத்தப்படும். இதற்குப் பிறகு உங்களுடைய சரீரம் ‘ஸ்பைக் புரத’த்தை உருவாக்கும், மற்றும் ‘ஸார்ஸ்-கோவ்-2’ வைரஸை அடையாளம் காணக் கற்றுக்கொண்டு அதை எதிர்த்துப் போரிட அதைப் பயன்படுத்தும். ‘செல்’களுக்குள் ஒரு முறை சென்றுவிட்ட பிறகு தனது பிரதிகளை அது உருவாக்க இயலாத வகையில் இந்த ‘அடினோவைரஸ்’ மாற்றியமைக்கப்பட்டுள்ளது. மற்ற ‘செல்’களுக்கு இதனால் பரவ, மற்றும் நோய்த்தொற்றினை ஏற்படுத்த இயலாது என்பது இதன் பொருள்.

## தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொண்ட பிறகு நீங்கள் எதிர்பார்க்க வேண்டியது

எவ்வொரு தடுப்பூசி மருந்தினையும் போல, 'கோவிட்-19' தடுப்பூசி மருந்தினை நீங்கள் பெற்றுக்கொண்ட பிறகு சில பக்க விளைவுகள் உங்களுக்கு ஏற்படக்கூடும்.

**'ஆஸ்ட்ரா-ஸெனெகா கோவிட்-19' தடுப்பூசி மருந்தினை** இட்டுக்கொண்ட பிறகு ஏற்படக்கூடிய **பொதுவான (common)** பக்க விளைவுகளில் உள்ளடங்குவன:

- ஊசி இடப்பட்ட இடத்தில் வலி, வீக்கம், நோவு, சிவந்த தன்மை அல்லது அரிப்பு
- அசதி
- தலைவலி
- தசை நோவு
- குமட்டல்
- சுரம் மற்றும் குளிர்கள்
- சுகவீன உணர்வு
- மூட்டு வலி.

**'ஆஸ்ட்ரா-ஸெனெகா கோவிட்-19' தடுப்பூசி மருந்தினை** இட்டுக்கொண்ட பிறகு ஏற்படக்கூடிய '**பொதுவாக அதிகம் ஏற்படாத**' **(less common)** பக்க விளைவுகளில் உள்ளடங்குவன:

- பருத்த நிணநீர்ச் சுரப்பிகள்
- கை-கால் வலி
- கிறக்கம்
- குறைவுற்ற பசி
- வயிற்று வலி.

இந்த பக்க விளைவுகள் பொதுவாக மிதமானவையாக இருக்கும். தடுப்பூசி மருந்தை இட்டுக்கொண்டவர்களில் மூன்றில் இரண்டு பங்கினருக்கு இவை ஏற்படும், தடுப்பூசியை இட்டுக்கொண்ட ஒரு நாளுக்குள்ளாக இவை துவங்கும், மற்றும் ஓரிரு நாட்களுக்குள் இவை மறைந்துவிடும்.

மற்ற பொதுவான தடுப்பூசி மருந்துகளோடு ஒப்பிடும்போது, இந்தத் தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொண்டவர்களுக்கு இதன் காரணமாக 'ஃப்ளு' சுரத்தைப் போன்ற அதி கணிசமான பக்க விளைவுகள் ஏற்படக்கூடும், மற்றும் அவர்களுடைய வழமையான அலுவல்களிலிருந்து ஒதுங்கியிருக்க வேண்டிய காலம் அவர்களுக்கு இருக்கக்கூடும். முதல் மருந்தளவை இட்டுக்கொண்ட பிறகு இந்த அறிகுறிகள் ஏற்படுவது, இரண்டாவது மருந்தளவை இட்டுக்கொண்ட பிறகு ஏற்படுவதைவிட அதி பொதுவானதாகும்.

தடுப்பூசி மருந்து இடப்பட்ட பிறகு முதல் 1-2 நாட்களில் ஊசி போடப்பட்ட இடத்தில் வலி அல்லது சுரம், தலைவலிகள் அல்லது உடல் வலிகள் ஏற்பட்டால், நீங்கள் 'பாரஸிடமோல்'-ஐ எடுத்துக்கொள்ளலாம். மேலே சொல்லப்படுள்ள அறிகுறிகளில் சிலவற்றைக் குறைக்க இவை உதவும். தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்வதற்கு முன்பாக நீங்கள் 'பாரஸிடமோல்' அல்லது 'இபுப்ரோஃபென்'-ஐ எடுத்துக்கொள்ள வேண்டிய தேவையில்லை. ஊசி போடப்பட்ட இடத்தில் வீக்கம் இருந்தால் 'குளிர்-திண்டு' (cold compress) ஒன்றை நீங்கள் பயன்படுத்தலாம்.

**'ஆஸ்ட்ரா-ஸெனெகா கோவிட்-19' தடுப்பூசி மருந்தினை** இட்டுக்கொண்ட பிறகு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள **அரிதான (rare)** பக்க விளைவுகளாவன:

- கடும் ஒவ்வாமை எதிர்வினை ('ஆனஃபிலாக்ஸிஸ்' (anaphylaxis):
    - 'கோவிட்-19 ஆஸ்ட்ரா ஸெனெகா தடுப்பூசி மருந்தினை இட்டுக்கோண்ட பிறகு 'ஆனஃபிலாக்ஸிஸ்' ஏற்படுவது மிகவும் அரிது. ஆஸ்திரேலியாவில் காணப்படும் வீதம் மற்ற எவ்வொரு தடுப்பு மருந்திற்கும் இருப்பதைப் போலத் தோன்றுகிறது.
- 'இரத்த உறைவு' (thrombosis) மற்றும் 'குறைவான இரத்த வட்டு அளவுகள்' (thrombocytopenia) ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட 'த்ரோம்போஸிஸ் வித் த்ரோம்போசைட்டொபீனியா சின்ட்ரம்' (thrombosis with thrombocytopenia syndrome (TTS),) எனப்படும் நிலை:
    - ஆஸ்திரேலியாவிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் கிடைக்கும் தகவல்கள் TTS ஒரு அரிதான நிலை என்று காண்பிக்கின்றன
    - சரீரத்தின் வெவ்வேறு பகுதிகளில் இந்த இரத்த உறைவுகள் ஏற்படலாம், மூளையில் ஏற்படும் இரத்த உறைவு (இது 'செரிப்ரல் வீனஸ் த்ரோம்போசிஸ்' (cerebral venous sinus thrombosis) எனப்படும்) மற்றும் அடிவயிற்றில் ஏற்படும் இரத்த உறைவு (இது 'இடியோபதிக் ஸ்ப்ளாஞ்ச்னிக் வெய்ன் த்ரோம்போசிஸ்' (idiopathic splanchnic vein thrombosis) எனப்படும்) ஆகியவை இதில் உள்ளடங்கும். 'இரத்த வட்டுகள்' (platelets) குறைவாக உள்ள நிலை இரத்தக் கசிவை ஏற்படுத்தக்கூடும்.
    - இந்த நோய் நிலைக்கான அறிகுறிகள் பெரும்பாலும் தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொண்ட பிறகு 4 முதல் 42 நாட்களுக்குள் ஏற்படுகின்றன.
    - இந்த நிலை ஏற்படுபவர்கள் மிகவும் சுகவீனமடைவார்கள், மற்றும் இவர்கள் மருத்துவமனைக்குச் செல்லவேண்டியிருக்கும். இந்த நோய்-நிலையின் காரணமாக நீண்ட கால இயலாமையும், மரணமும் கூட ஏற்படக்கூடும்.
    - Patient information sheet on AstraZeneca COVID-19 vaccine and TTS எனும் தகவல் ஏட்டில் TTS -ஐப் பற்றிய மேலதிகத் தகவல்களைக் காணலாம்.

**தடுப்பூசி மருந்து இட்டுக்கொண்ட பிறகு பின்வரும் தருணங்கள் உங்களுக்கு ஏற்பட்டால் மருத்துவ கவனிப்பினை நீங்கள் நாடவேண்டும்:**

- ஒவ்வாமை எதிர்வினை ஒன்று உங்களுக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்று நீங்கள் நினைத்தால். சுவாசிப்பதில் சிரமம், சுவாச-இரைப்பு (wheezing), அதிவேக இதயத் துடிப்பு அல்லது மயங்கி விழல் போன்ற பாரதூர அறிகுறிகள் உங்களுக்கு ஏற்பட்டால் '000' (மூன்று பூஜ்யம்)-ஐ அழையுங்கள்.
- இந்தத் தடுப்பூசி மருந்தின் காரணமாக எதிர்பார்க்கப்படும் பக்க விளைவு ஒன்று உங்களுக்கு ஏற்பட்டு, சில நாட்களுக்குப் பிறகும் அது மறையவில்லை என்றால்.
- உங்களுக்கு பின்வரும் அறிகுறிகள் ஏதேனும் உள்ளன, குறிப்பாக தடுப்பூசி போட்ட 4 முதல் 42 நாட்களுக்குள்:
    - தடுப்பூசி இட்டுக்கொண்டதிலிருந்து 48 மணி நேரத்திற்குப் பிறகும் நீடிக்கும் தலைவலி, அல்லது தடுப்பூசி இடுக்கொண்ட பிறகு 48 மணி நேரத்திற்குப் பிறகு ஏற்படும் தலைவலி. சாதாரண வலி நிவாரணிகள் ஆரம்பத்தில் தலைவலியை சிறிது குறைக்கலாம், ஆனால் வலி இடைவிடாது நீடிக்கும்
    - மங்கிய கண் பார்வை
    - முகம் அல்லது கை-கால்களில் நலிவு
    - குழப்ப-நிலை அல்லது வலிப்பு.
    - மூச்சுத் திணறல்
    - நெஞ்சு வலி
    - இடைவிடாத அடிவயிற்று வலி

- காய்ச்சல் வீக்கம்
- ஊசி போடப்பட்ட இடத்தைத் தவிர உடலில் மற்ற இடங்களில் காணப்படும் காரணமில்லாத ஊசிக்-குத்து போன்ற சிவந்த கொப்புளங்கள் அல்லது கன்றிய காயங்கள்.

சமீபத்தில் நீங்கள் தடுப்பூசி மருந்து இட்டுக்கொண்டீர்கள் என்பதை உங்களுடைய மருத்துவருக்குச் சொல்கிறீர்கள் என்பதை உறுதிப்படுத்துங்கள். அவசரமில்லாத அறிகுறிகளுக்கு, உங்களுடைய வழமையான சுகாதாரப் பராமரிப்பு வழங்குநரை நீங்கள் பார்க்கலாம் (வழக்கமாக உங்களுடைய பொது மருத்துவர் (GP)).

## தடுப்பூசி மருந்தின் பாதுகாப்பு குறித்த கண்காணிப்பும் பக்க விளைவுகளை அறிவித்தலும்

சந்தேகிக்கப்படும் பக்க விளைவுகளை உங்களுடைய தடுப்பூசி மருந்து வழங்குநர் அல்லது சுகாதாரப் பராமரிப்புத் தொழிலருக்கு நீங்கள் தெரியப்படுத்தலாம். அதையடுத்து அவர்கள் உங்கள் சார்பாக உங்களுடைய மாநில அல்லது எல்லைப்பகுதி சுகாதாரத் திணைக்களத்திற்கு, அல்லது நேரடியாக 'மருத்துவ-சிகிச்சைச் சரக்குகள் நிர்வாக'(Therapeutic Goods Administration (TGA))-த்திற்கு சம்பிரதாயப்படியான அறிக்கை ஒன்றை ஏற்படுத்துவார்கள்.

அதை நீங்களே நேரடியாக அறிவிக்க விரும்பினால், TGA-யினரது வலைத்தல(TGA website)த்தில் உள்ள [https://www.tga.gov.au/reporting-suspected-side-effects-associated-covid-19-vaccine](https://www.tga.gov.au/reporting-suspected-side-effects-associated-covid-19-vaccine) எனும் பக்கத்திற்குச் சென்று அங்கு தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுங்கள்.

## தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொண்ட பிறகான 'கோவிட்-19' நோயறிவுச் சோதனை

'கோவிட்-19' தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொண்டதால் ஏற்படும் சில பக்க விளைவுகள் 'கோவிட்-19' தொற்றின் அறிகுறிகளைப் போன்றவையாக இருக்கக்கூடும் (உதாரணமாக, சுரம்). இருப்பினும், 'ஆஸ்ட்ரா-ஸெனெகா கோவிட்-19' தடுப்பூசி மருந்தில் உயிரோடுள்ள 'ஸார்ஸ்-கோவ்-2' (SARS-CoV-2) வைரஸ் எதுவும் இல்லை மற்றும் இதனால் உங்களுக்குக் 'கோவிட்-19'-ஐ ஏற்படுத்த இயலாது. பின் வரும் தருணங்கள் உங்களுக்கு ஏற்பட்டால், 'கோவிட்-19' நோயறிவுச் சோதனையை மேற்கொள்ளவேண்டிய, அல்லது உங்களைத் தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டிய தேவை உங்களுக்கு இல்லாமல் இருக்கலாம்:

- தடுப்பூசி மருந்தினை நீங்கள் இட்டுக்கொண்ட பிறகு வரும் முதல் இரண்டு நாட்களில் சுரம், தலைவலி அல்லது அசதி போன்ற பொதுவான அறிகுறிகள் உங்களுக்கு ஏற்பட்டால், மற்றும்
- சுவாச நோய் அறிகுறிகள் ஏதும் உங்களுக்கு இல்லை என்று உங்களுக்கு உறுதியாகத் தெரிந்தால் (உதாரணமாக, நாசிக் கசிவு, இருமல், தொண்டை வலி, வாசனைத் திறன் இழப்பு அல்லது சுவைத் திறன் இழப்பு).

இருந்தாலும், மிகச் சமீபத்திய, நடப்பு நாள் வரைக்குமான தகவல்களைத் உங்களுடைய மாநிலம்/எல்லைப்பகுதியிலுள்ள தற்போதைய வழிகாட்டல்களைச் சோதித்து நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டும். நீங்கள் வாழும் உள்ளூர்ப் பகுதியில் 'கோவிட்-19'-இன் திடீர்ப் பரவல் ஒன்று ஏற்படும் தருணத்தில் இந்த அறிவுரைகள் மாறலாம். மற்ற தேவைப்பாடுகளை நீங்கள் பூர்த்தி செய்தால், உதாரணத்திற்கு, 'கோவிட்-19' தொற்று இருப்பது தெரியவந்துள்ள ஒருவருடன் நீங்கள் நெருங்கிய தொடர்பில் இருந்திருப்பவர் என்றால், 'கோவிட்-19' நோயறிவுச் சோதனையை நீங்கள் இன்னமும்

மேற்கொள்ளவேண்டியிருக்கலாம். சந்தேகமாக இருந்தால், மருத்துவ மதிப்பீட்டினை நாடுங்கள்.

## உங்களுடைய இரண்டாவது சந்திப்புவேளையை நினைவில் கொள்ளுங்கள்

கிட்டத்தட்ட 12 வார கால இடைவெளியில், 'ஆஸ்ட்ரா-ஸெனெகா கோவிட்-19' தடுப்பூசி மருந்தின் இரண்டு மருந்தளவுகளை நீங்கள் பெறவேண்டியது முக்கியம். 12 வாரங்களில் இருந்து இந்த இடைவெளியை 4 வாரங்களுக்குக் குறையாத இடைவெளியாகக் குறைத்துக்கொள்வது சில சூழல்களில் தகுந்ததாக இருக்கலாம். 'கோவிட்-19'-இற்கு எதிராக இன்னும் சிறந்த பாதுகாப்பை இரண்டாவது மருந்தளவு உங்களுக்கு அளிக்கும்.

## உங்களுடைய சந்திப்புவேளையின்போது நீங்கள் கொடுக்கும் தகவல்கள் எவ்வாறு பயன்படுத்தப்படும்

உங்களைப் பற்றிய தனிப்பட்ட விபரங்கள் எவ்வாறு சேகரிக்கப்படும், இருப்பில் வைக்கப்படும் மற்றும் பயன்படுத்தப்படும் என்பதைப் பற்றிய தகவல்களுக்கு https://www.health.gov.au/using-our-websites/privacy/privacy-notice-for-covid-19-vaccinations எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள்.